008/ ... 1166188.

(3 copys)

Commissioner of Social Welfare
18 JUN 2025
Kamarajar Salai, Chennai-600 005.

NMP

## சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – 2023-2024-ஆம் ஆண்டிற்கான ஒற்றைச் சாளர முகமைக் (SNA) கணக்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து சத்துணவு மையங்களில் சிறுபழுதுகளை (Minor repairs) சரி செய்திட செலவினம் அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை

அரசாணை (2ப) எண்.18

நாள் 16.06.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு, ஆனி 2,

படிக்க:-

JD-NMP for n/a. 19/6/25

1. அரசாணை (ப) எண்: 113, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந-1) துறை, நாள் 23.04.2025.
2. சமூக நல ஆணையரின் கடித ந.க.எண்.35519/சஉதி-2/2025, நாள் 15.05.2025

-----

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொடரா செலவினத்திற்கான ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மாநில அரசின் பங்குடன் சத்துணவு சமையல் கூடங்களின் பராமரிப்பு மற்றும் சிறு பழுது நீக்கும் செலவினத்திற்காக, ரூ.3,52,70,000/-ம், எரிவாயு அடுப்பு மற்றும் ஏனைய சமையல் உபகரணங்கள் வாங்கிட ரூ.25,13,35,000/-ம் ஆக மொத்தம் ரூ.28,66,05,000/- ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஒற்றைச் சாளர முகமைக் கணக்கில் (SNA) செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 2025-2026-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு கூடுதலாக, ரூ.25,13,35,000/-ஐ 2025-2026-ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. த.பி.பா.,

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சத்துணவு மையங்களுக்கு சிறு பழுதுகளை நீக்கம் செய்யும் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில், சத்துணவு மையங்களில் தரை செப்பனிடுதல், மேற்கூரை பழுது பார்ப்பது, கதவு, ஜன்னல் பழுது பார்த்தல், மின் இணைப்பு பழுது பார்த்தல், வண்ணம் பூசுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும், மேலும், 10 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டிடங்களில் உள்ள சிறிய பழுதுகளை சரி செய்யவும், இப்பணியினை ஒரு

த.பி.பா.,

துறை பணியாக எடுத்துக்கொண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் குறுகிய கால அளவில் முடித்திடும் வகையில், மாவட்டங்களில் உள்ள 3527 சத்துணவு மையங்களில், சிறு பழுதுகளை மேற்கொள்ள ஒரு மையத்திற்கு ரூ.10,000/- வீதம், 3527 சத்துணவு மையங்களுக்கு மொத்தம் ரூ.3,52,70,000/-ஐ ஒற்றைச் சாளர முகமைக் கணக்கிலிருந்து செலவினம் மேற்கொள்ள ஏதுவாக, மாவட்டங்களுக்கு விடுவித்திட அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு சமூக நல ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சமூக நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஒற்றைச் சாளர முகமைக் கணக்கில் (SNA) வரவு வைக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து, இணைப்பில் உள்ளவாறு மாவட்டங்களில் செயல்படும் 3527 சத்துணவு மையங்களில் சிறு பழுதுகளை மேற்கொள்ள ஏதுவாக, ரூ.3,52,70,000/-ஐ (மூன்று கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) (ஒன்றிய அரசு பங்கு ரூ.2,11,62,000/- மற்றும் மாநில அரசு பங்கு ரூ.1,41,08,000/-)) செலவு செய்திடவும், மேற்படி பழுது நீக்கும் பணியினை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக திட்ட விதிமுறைகளை பின்பற்றி செயல்படுத்திடவும் சமூக நல ஆணையருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேற்படி செலவினம் மேற்கொண்டற்கான பயனீட்டுச் சான்றிதழ்களை உரிய நேரத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்,

சமூக நல ஆணையர், சென்னை-5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
இயக்குநர், நகராட்சி நிர்வாகத் துறை, சென்னை-28.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-15.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை-I/II), சென்னை-18.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.

நகல்,

மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (ச.ந.) த்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்